DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 94 /2023**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Father Name – | குமார் |
| Age | 53 | Village – | தே.சொக்கலிங்கபுரம் |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026.

**5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. இந்த வழக்கில் எனது தந்தை குமார் எழுதிக்கொடுத்த தானபத்திரத்தை பற்றியும் அதன் மூலப்பத்திரங்களை குறித்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தந்தை எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண்.1028/1E க்கு கட்டுப்பட்ட சொத்தை குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1028/1E ல் 2 ஏக்கர் 63 செண்ட் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1028/1E க்கான பட்டா 5 முதல் 7 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1028/1E க்கு கட்டுப்பட்ட நிலம் எனது பெயரிலோ எனது தந்தை பெயரிலோ இருப்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1028/1E ல் தான் கிணறு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.1028/1E ல் தான் முறைப்படி மின்இணைப்பு வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல, சர்வே எண்.1028/1D ல் தான் மின்இணைப்பு இருந்தது அதை மோசடியாக மாற்றியுள்ளார்கள்.

2. எனது தந்தை எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண்.1046/8 க்கு கட்டுப்பட்ட நிலத்தில் உள்ள ஆள்துளை கிணறு மற்றும் அதில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.SC111 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த மின்இணைப்பிற்கும் வழக்குரை சொத்திற்கும் சம்மந்தமில்லை. மாரியப்பத்தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் குமார், அய்யாத்துரை மற்றும் ராஜேந்திரன் என மூன்று வாரிசுகள். 21.07.1989 ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் மாரியப்பத்தேவருக்கு A schedule ம், குமாரத்தேவருக்கு B schedule ம், அய்யாத்துரைக்கும் C schedule ம் ராஜேந்திரனுக்கு D schedule ம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மாரியப்பத்தேவர் ராஜேந்திரனுக்கு 2011 ம் ஆண்டு எழுதிக்கொடுத்த தான

செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சர்வே எண்.1028/1E ல் 2 ஏக்கர் 63 செண்ட்டும், சர்வே எண்.1035/1, 2 மற்றும் 3 ல் 1 ஏக்கர் 40 செண்ட் நிலமும் மற்றும் இன்னொரு வீட்டையும் ராஜேந்திரனும் அவர்களது வாரிசுகளும் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.1028/1D, சர்வே எண்.1046/4E க்கு கட்டுப்பட்ட கிணறு மற்றும் சர்வே எண்.1028/1E க்கு கட்டுப்பட்ட சொத்தில் எங்களுக்கு உரிமை இருப்பதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்களுக்கும் ஆவணம் இல்லை அவர்களுக்கும் ஆவணம் இல்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 10.03.2015 ம் தேதி முதல் வாதி தான் கிணறு மற்றும் மோட்டார் பம்ப்பை அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. லீலாவதி பத்திரம் எதுவும் இல்லை என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பல வருடங்களாக லீலாவதி பெயரில் தான் மின் இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. பல மூல ஆவணங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. ராஜேந்திரன் இறந்த காரணத்தினால் 5 முதல் 7 பிரதிவாதிகளிடமிருந்து பணம்பறிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.)**

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.22 17:26:05 +0530

District Munsif,
Bodinayakanur.